**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**

**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள்

**இ.ம.எண். 1/2025**

**இல்**

**அசல் வழக்கு எண். 82/2021**

| |
|---|
| தரங்கம்பாடி தாலுக்கா, எருக்கட்டாஞ்சேரி அஞ்சல், ஒழுகைமங்கலம் கிராமம், மேலவீதியில் வசிக்கும் முருகையன் குமாரர் இந்து 50 வயதுள்ள ஜெயகுமார். |

..மனுதாரர்/வாதி

//எதிர்//

| |
|---|
| தரங்கம்பாடி தாலுக்கா, எருக்கட்டாஞ்சேரி அஞ்சல், ஒழுகைமங்கலம் கிராமம், மேலவீதியில் வசிக்கும் இந்து 51 வயதுள்ள பஞ்சாபி கேசவன் குமாரர் பாலாஜி (எ) வெங்கடசுப்ரமணியன். |

..எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

மனுதாரரால் இம்மனுவானது கடந்த 23.01.2025 அன்று விசாரணைக்காக அழைத்து ஆஜராகாததால் தள்ளுபடி ஆன வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 21.02.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 25.03.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று 25.09.2025 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. நாரயணமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. K. சங்கரன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று 09.10.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

மனுதாரர், இந்த மனுவில் செலவுத்தொகையாக ரூ.3,000/-த்தை மயிலாடுதுறை சமரச மையத்தில் 23.10.2025 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2025.10.09 16:19:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**